அந்த இடைத் தரகர்களும், மற்றவர்களும், அதை ஒரு விவகாரமாக ஆக்கி வழக்குப் போடுவதற்குரிய நிலையை சர்க்கார் உருவாக்குகிறது என்றால் அது இம்புடேஷனில் வருகிறது. அது சரியா? (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அனுமதிக்க இயலாது உட்காருங்கள். தாங்கள் கேட்கும் கேள்விக்கும் இந்த பிரச்சினைக்கும் சம்பந்தம் இல்லை.

கூடலூர் தாலுக்காவில் அரசு நிலங்கள் ஆக்கிரமிப்பு.

*வினா எண் 752—திரு கே. உச்சி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கூடலூர் தாலுக்காவில் அரசுக்கு சொந்தமான ரெவின்யூ, காட்டு இலாகா நிலங்களை தோட்ட முதலாளிகள் ஆக்கிரமித்திருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அந்த நிலங்களை மீட்டு நிலமில்லாத தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்க உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்: (அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டத்தில் அரசுக்குச் சொந்தமான வருவாய்த்துறை காட்டு இலாகா நிலங்களில் தோட்ட முதலாளிகள் ஆக்கிரமிப்பு எதுவும் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவர் அவர்களே, கடலூர் தாலுக்காவில் தோட்ட முதலாளிகள் எந்த நிலத்தையும் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். சென்ற ஆண்டு கடலூர் தாலுகாவில் விவசாயிகள் பரவலாக நிலத்தை கையகப்படுத்தக்கூடிய இயக்கத்தில் இறங்கியதற்கான காரணம் என்ன?

லூயிஸ் என்ற விவசாயி இந்தக் கொடுமை தாங்காது கோட்டாட்சி அலுவலகத்திற்கு முன்னால் தற்கொலை செய்துகொண்டதற்கான அடிப்படை காரணம் என்ன? அங்கே, விவசாயிகள் ஏராளமான காட்டிலாகா நிலமிருந்தும், ரெவின்யூ நிலமிருந்தும் பங்கிட்டுக் கொடுக்க முடியாத காரணத்தால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று நான் உங்களுக்கு கூறக் கடைமைப் பட்டிருக்கிறேன்.

1979 ஏப்ரல் 20]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் கொஞ்சமும் தொடர்பில்லை; என்றாலும் உறுப்பினர் அவர்களுக்கு பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மூலக் கேள்வி தோட்ட முதலாளிகள் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள் ஆக்கிரமிப்புச் செய்தார்களா என்பது. ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்று பதில் சொல்லிவிட்டேன். நாங்கள் நிலமற்றவர்கள் பலருக்கு நிலம் கொடுக்கிறோம். அப்படி நிலமற்றவர்களுக்கு கொடுப்பது என்றாலும் கூட, 1968ம் ஆண்டு சட்டத்தைப் பார்க்கின்றபோது, அதற்கு முன்னால் 3 ஆண்டுகளுக்கு முன்னால் யாரவாது ஆக்கிரமிப்பு செய்திருந்தால், அவர்களுக்கு அந்த நிலம் பட்டா செய்து கொடுக்கப்படும் என்று சட்டம் செய்யப்பட்டிருக்கிறது. சட்டத்தை இந்த அவைக்குக் கொண்டு வந்தது 1968-ல், இப்படிப்பட்ட சட்டம் கொண்டுவர வேண்டும் என்று முயற்சி எடுத்தது, 1966-ல்; இதை நடைமுறைப் படுத்தியது 1974-ல், இந்தச் சட்டம் வருவதற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் யார் ஆக்கிரமிப்பு செய்திருந்தார்களோ அவர்களுக்கு அந்த இடத்தைக் கொடுக்க வேண்டும் என்று சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னால் ஆக்கிரமிப்பு செய்தவர்களுக்கு இப்போது சில சங்கடங்கள் ஏற்பட்டிருக்கலாம். மேலும் காடுகளில் ஆக்கிரமிப்பு செய்து நல்ல விலையுயர்ந்த மரங்களை வெட்டிச் செல்கிறார்கள். அங்குள்ள தேக்கு மரங்கள், சந்தன மரங்கள் இவைகளை எல்லாம் வெட்டியெடுக்கிறார்கள். ஆகவேதான் இதன் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[முற்பகல் 9-50]

திரு. போ. கோபாலன்: தலைவர் அவர்களே, கூடலூர் மாவட்டம் மைசூர் மாநிலத்திற்கும் கேரளா மாநிலத்திற்கும் உள்ள எல்லையோரத்தில் இருக்கின்றது. அங்கே ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டிருப்பது உண்மைதான். ஆனால் இந்தச் சட்டம் வந்ததற்குப் பின்னால் இந்த நிலங்களையெல்லாம் பட்டா செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருகிறார்கள். ஆகவே தொடர்ந்து நான்கைந்து ஆண்டுகளாக விவசாயம் செய்து கொண்டிருப்பவர்களுக்கு ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் என்ற அளவில் பட்டா செய்து கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, இந்த மூலச் சட்டத்தில் திருத்தம் வருவதற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ஆக்கிரமிப்பு செய்து கொண்டிருப்பவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று இருந்தாலும், அதை தளர்த்தி

1969-க்கு முன்னால் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதில் இருக்கின்ற சங்கடங்களையும் மாண்புமிகு உறுப்பினர்கள் உணர வேண்டும், பெரும்பாலானவர்கள் ஆக்கிரமிப்பு செய்வது விவசாயம் செய்வதற்காக இல்லை. காட்டுக்குள் ஆக்கிரமப்பு செய்து விலையுயர்ந்த மரங்களை வெட்டி எடுக்கின்றார்கள். இதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் உணரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

புயல் காலங்களுக்கான காப்பு விடுதிகள்

*வினா எண். 753—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) கடும் புயல் தாக்கும்போது புகலிடம் தரும் காப்பு விடுதிகள் அமைத்திட அரசு ஆலோசித்து வருகின்றதா ?

(ஆ) ஆம் எனில், எங்கெங்கு?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:

(அ) & (ஆ) அவை முன், விவர அறிக்கை * வைக்கப்பட்டுள்ளது.

திரு. பி. எச். பாண்டியன்: தலைவர் அவர்களே, இந்த புயல் பாதுகாப்பு விடுதிகள் அமைப்பதற்கு அரசுக்கு எந்தெந்த நிறுவனங்கள் உதவி செய்திருக்கிறது என்கின்ற விவரங்களையும், அந்த நிறுவனங்களின் பெயர்களையும் அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, மராட்டிய மாநில மக்கள் புயல் நிவாரணக் குழு 10 லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறது. அதேபோல் இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் தமிழ்நாட்டுக் கிளை இங்கு கட்டப்படுகிற புயல் பாதுகாப்பு இல்லத்திற்காக 28·12 லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறது. அதே போல் கானடா நாட்டு—அனைத்து நாட்டு வளர்ச்சி நிறுவனம் (கன்னடியன் இன்டர்நேஷனல் டெவலப்மென்ட் ஏஜென்ஸி) 29 ஆயிரம் டாலர் தந்திருக்கிறார்கள். அதேபோல் ஐரோப்பிய பொருளாதார சமூதாய நிறுவனம் இங்கு 50 புகலிடம் கட்டுவதற்கு அவர்கள் பணம் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இப்படிக் கொடுக்கப்பட்ட பணத்திலிருந்து இதுவரை இரண்டு இடங்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. 17 இடங்களில் கட்டப்பட்டு வருகின்றன. இன்னும் 11 இடங்களில் கட்டுவதற்கு அனுமதி

---

* 894-896ம் பக்கத்தில் இணைப்பு IIஆக அச்சிடப்பெற்றுள்ளது.